# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2089/17 – 2018 සැප්තැම්බර් මස 17 වැනි සඳුදා – 2018.09.17

*2089/17 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

*மத்திய மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நியதிச்சட்டத்தின் 47(1) ஆம் பிரிவின் கீழான சட்டவிதிகள்*

*மத்திய மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நியதிச்சட்டத்தின் 47(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், மத்திய மாகாணத்தின் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய நான், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை விதிக்கின்றேன்.*

**சரத் ஏக்கநாயக்க,**
மத்திய மாகாண மாகாண சபையின் பிரதான அமைச்சரும்
நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம்,
மாகாண நிர்வாகம், மனித வலு, கல்வி மற்றும் கலாசார நடவடிக்கைகள்,
சுற்றுலா, காணி, கூட்டுறவு அபிவிருத்தி, வணிகம் மற்றும் வர்த்தகம்,
உணவு விநியோகம் மற்றும்
பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் மற்றும்
முதலீட்டு ஒருங்கிணைப்பு,
வேறு அமைச்சுக்களின் கீழ் செய்யப்படாத விடயப்
பொறுப்புக்களுக்குமான அமைச்சரும்.

*பிரதான அமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண மாகாண சபை,*
*பள்ளேகலை,*
*2018, செத்தெம்பர் 03.*

முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களின் சங்கங்களை ஸ்தாபிக்கும் போது பின்பற்ற வேண்டிய சட்ட ஒழுங்குகள்.

*முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி சங்கங்களை ஸ்தாபிப்பது தொடர்பான சட்ட ஒழுங்கு.*

1. முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களின் பண்புசார் அளவுசார் மற்றும் கட்டமைப்பு அபிவிருத்திக்காக மனித வளத்தை விளைதிறனாக பயன்படுத்தும் நோக்கில், அபிவிருத்தி சங்கங்களை ஸ்தாபிப்பதற்காக முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி சங்க சட்ட ஒழுங்குகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இயற்றப்பட்டுள்ளது.

*முன் பிள்ளைப் பருவ மத்திய நிலைய அபிவிருத்தி சங்க அமைப்பு.*

2. முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலைய சங்கமானது நிலையத்தின் நிலையான தன்மையை நோக்காகக் கொண்டு அதன் முகாமைத்துவம், ஆசிரிய மதியுரையாளர்கள், பெற்றோர்கள் மற்றும் பிரஜைகளிடமிருந்து திட்டமிடப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும்.

*முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி சங்கத்தை ஸ்தாபிப்பதற்கான நோக்கங்கள்.*

3. (அ) மத்திய நிலையத்தின் பௌதீக சூழல் மற்றும் கற்றல் சூழலை அபிவிருத்தி செய்வதினூடாக பண்புசார் விருத்தியை ஏற்படுத்துவதற்காக அபிவிருத்தி சங்கத்தை பயன்படுத்துதல்.

(ஆ) மத்திய நிலையத்தின் பொறுப்பு மற்றும் பொறுப்பேற்றலை அத்தாட்சிப்படுத்துவதற்கு முகாமைத்துவத்திற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

(இ) தெளிவான மற்றும் நெகிழ்வுத்தன்மையான செயற்பாடுகளுக்காக முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்பை வழங்குதல்.

(ஈ) பங்களிப்பு முகாமைத்துவத்தினூடாக தர்க்க ரீதியின் அடிப்படையில் தீர்மானம் எடுப்பதற்காக மத்திய நிலையத்தின் முகாமைத்துவத்திற்கு தேவையான ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல்.

(உ) மத்திய நிலையத்தின் அடிப்படை தேவைகளை முதன்மைப்படுத்திக் கொண்டு அத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் அபிவிருத்தி சங்கத்தை ஈடுபடுத்துதல்.

(ஊ) தரவு மற்றும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுத்தல் மற்றும் திட்டமிடல் முறையொன்றின் மூலம் அபிவிருத்தி பாதைக்கு மத்திய நிலையத்தை கொண்டு செல்லல்.

(எ) மத்திய நிலைய பிள்ளைகளின் பெற்றோர்களுக்கிடையே நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்துவதினூடாக மத்திய நிலையத்தின் விளைதிறனை உயர்த்துதல்.

(ஏ) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தியின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றான அதன் நிலைத்தன்மை மற்றும் செயற்பாட்டுத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒத்துழைப்பை வழங்குதல்.

(ஐ) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பாக பிரஜைகளை தெளிவூட்டுவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குதல்.

*அபிவிருத்தி சங்கத்தை ஸ்தாபித்தல்.*

4. (அ) மத்திய மாகாணத்தினுள் செயற்பாட்டிலுள்ள அனைத்து முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களிலும் அபிவிருத்தி சங்கம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும்.

(ஆ) அவற்றின் அனைத்து அபிவிருத்தி சங்கங்களும் மத்திய மாகாணத்தின் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவில் பதிவு செய்ய வேண்டும்.

(இ) சங்க உறுப்பினர் குழுவின் மூலம் சங்கத்தின் அனைத்து நிர்வாக செயற்பாடுகளும் செய்யப்படல் வேண்டும்.

(ஈ) மத்திய நிலையத்தில் இருக்கின்ற பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு பொருந்தும் வகையில் சங்க சபைக் கூட்டத்தின் தீர்மானத்தின் படி செயற்குழுவின் எண்ணிக்கை ஒற்றை இலக்கமாக இருக்கும் வகையில் தீர்மானம் எடுக்க இயலும்.

(உ) மத்திய மாகாண முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் அல்லது அவரினால் பெயரிடப்படும் பிரதிநிதிகள் அல்லது பிரதிநிதி ஒருவருக்கு மாத்திரமே அபிவிருத்தி சங்க மேற்பார்வை/ தகவல் பெற்றுக் கொள்ளலில் பங்குபற்ற முடியும்.

5. (அ) மத்திய நிலையத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ள பிள்ளைகளின் எல்லா பெற்றோர்களையும் சங்க அங்கத்துவர்களாக நியமிக்க வேண்டும். சங்க அங்கத்துவம்.

(ஆ) மத்திய நிலையத்தின் உறுப்பினர் குழுவானது கௌரவ தலைவர்/கௌரவ உப தலைவர்/கௌரவ செயலாளர்/கௌரவ உப செயலாளர்/ கௌரவ பொருளாலர், கணக்காய்வாளர் மற்றும் சபை துணை உறுப்பினர்கள் ஆகிய அலுவலர்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். உறுப்பினர் குழு.

(இ) மத்திய நிலையத்தின் முகாமையாளர்/உரிமையாளர் மற்றும் ஆசிரிய மதியுரையாளர்கள்/உதவி ஆசிரிய உதவியாளர்கள் அதிகாரபூர்வமாக சங்க உறுப்பினர்களாவர்.

(ஈ) கௌரவ செயலாளர் மற்றும் கௌரவ பொருளாலரின் பதவிகளுக்கு பெற்றோர்களை நியமிக்க வேண்டும்.

(உ) அங்கத்துவர்களை நியமிக்கும்போது அதிகாரப் பிரதேசத்தை சமமாக பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பிரதான பதவிகளுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்ய வேண்டும்.

(ஊ) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பிரதான ஆசிரிய மதியுரையாளர் அதிகாரபூர்வமாக தலைவராக வேண்டும்.

6. (அ) இல. 03 ஐ உடைய நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை சங்க சட்டத்தின் நோக்கங்களாக உள்ளடக்கப்பட வேண்டும். முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி சங்க சட்டம்.

(ஆ) அனைத்து அபிவிருத்தி சங்கங்களாலும் சபைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்க சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும்.

(இ) எல்லா அபிவிருத்தி சங்கத்திற்கும் உறுப்பினர்களை இணைத்தல் மற்றும் நீக்குதல், வருடாந்தம் சபை கூட்டத்தை நடாத்துதல் மற்றும் ஏனைய கூட்டங்களை நடாத்துதல் தொடர்பாக அனைத்து ஏற்பாடுகளையும் உள்ளடக்கிய சட்டம் ஒன்று இருக்க வேண்டும்.

(ஈ) சங்க உறுப்பினர் குழுவிலிருந்து உறுப்பினர் ஒருவர் பணிதுறப்பு செய்யும்போது அல்லது விலகும் சந்தர்ப்பங்களில் அவ் உறுப்பினரின் பொறுப்பில் உள்ள சகல ஆவணங்களும் சங்க சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறையாக கையளிக்கப்பட வேண்டும்.

(உ) சங்க சட்டத்திற்கு மேலே இல. 03 நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் தவிர்ந்த ஏனைய நோக்கங்கள் உள்ளடக்கப்படுமாயின், அந் நோக்கங்களிற்கு சிக்கல் அளிக்காத வகையில் இருக்க வேண்டும்.

(ஊ) (i) சங்க சட்ட சீர்திருத்தம் அல்லது விரிவாக்கல்கள் செய்ய வேண்டியது சபைக் கூட்டத்தில் மாத்திரமே.

(ii) சங்க சட்ட சீர்திருத்தம் அல்லது விரிவாக்கல்களுக்காக முழு அங்கத்துவ எண்ணிக்கையில் 2/3 வாக்குகள் அவசியமாகும்.

(எ) சங்க சபைக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதன் படிவிசேட சபைக் கூட்டங்கள் மற்றும் வேறு கூட்டங்கள் பற்றிய ஏற்பாடுகளை சங்க சட்டத்தில் உள்ளடக்க முடியும்.

7. (அ) சட்டத்தை ஏற்படுத்தும்போது மத்திய நிலையத்தின் பதிவிலக்கம் தொடக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டியதோடு, முடிவில் அபிவிருத்தி சங்கம் எனக் குறிப்பிடப்பட வேண்டும். முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி சங்கத்தின் பெயர், முகவரி மற்றும் பதவிக் காலம்.

(ஆ) அபிவிருத்தி சங்கத்தின் முகவரியாக மத்திய நிலையத்தின் முகவரியை இட வேண்டும்.

(இ) அபிவிருத்தி உறுப்பினர் குழுவின் பதவிக் காலம் ஒரு நாட்காட்டி வருடத்திற்கு வரையறுக்கப்பட வேண்டும்.

முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி சங்கத்தின் சபைக் கூட்டத்தின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள்.

8. சபைக் கூட்டத்திலே கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்க இயலும்.

(அ) சங்கத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்துதல் மற்றும் சங்கத்தை நடாத்திச் செல்வதற்காக ஆரம்ப கூட்டம் ஒன்றை நடாத்துதல்.
(ஆ) ஆரம்ப சபைக் கூட்டத்தில் உறுப்பினர் குழுவை நியமித்தல்.

(இ) மத்திய நிலையத்தின் எல்லா அங்கங்களினதும் பண்புசார் மற்றும் அமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

(ஈ) சங்க சட்டத்தை உருவாக்குதல், சபைக் கூட்டத்தில் முன்வைத்தல் மற்றும் அவற்றை சட்டமயமாக்கல்.

(உ) சங்க சட்டவிதிகளின் படி செயற்படுதல்.

(ஊ) நாட்காட்டி வருடத்தினுள் குறைந்தபட்சம் மூன்று தடவைகள் சபைக் கூட்டத்தை நடாத்த வேண்டும்.

(எ) இச் சட்டவிதிகளை அமுல்படுத்தி 3 மாதங்களுக்குள் சங்க சபைக் கூட்டத்தை நடாத்துதல்.

(ஏ) சங்கத்தின் பிரதான நோக்கங்கள் மற்றும் இலக்கை அடைவதற்கு தேவையான மற்றும் துணைபுரியக் கூடிய எல்லா செயற்பாடுகளுக்கும் அதிகாரம் அளித்தல்.

(ஐ) மத்திய நிலையத்தின் நிர்வாகத்தின் மூலம் மத்திய நிலையத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை வழங்க கோரும் சந்தர்ப்பங்களில் சந்தர்ப்பத்திற்கேற்ப தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

(ஒ) கூட்டம்/உறுப்பினர் குழு/கூட்டம் விசேட கூட்டங்கள் போன்ற கூட்டங்களின்போது குறைநிறைகள் யாது என்பது பற்றி தீர்மானித்தல்.

(ஓ) அங்கத்துவ கட்டணம் மற்றும் கட்டணங்களை வசூலிக்கும் திகதியை தீர்மானித்தல்.

(ஔ) சங்கத்தின் வங்கிக் கணக்கை பேண வேண்டிய வங்கி யாது என்பது பற்றி தீர்மானித்தல்.

சபைக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள்.

9. சபைக் கூட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியும்.

(அ) துணைக் குழு ஒன்றினை ஸ்தாபிக்க வேண்டுமாயின் அத்துணைக்குழு யார் என்பது பற்றியும் துணைக் குழுவை ஸ்தாபித்தல் எந்த நிர்ணயங்களின் அடிப்படையில் என்பது பற்றியும் நிச்சயித்தல்.

(ஆ) துணைக் குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை, செயற்குழு, அதன் பதவிகள் மற்றும் பதவி எண்ணிக்கைகளை தீர்மானித்தல்.

(இ) கூட்டங்களை நடாத்த வேண்டிய கால எல்லைகளை தீர்மானித்தல்.

(ஈ)சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் என்ன என்பதனை தீர்மானித்தல்.

தலைவருக்குள்ள அதிகாரங்கள்.

10. கௌரவ தலைவரின் அதிகாரங்கள்

(அ) சட்டத்தின் படி கூட்டங்களுக்கான அழைப்பு விடுத்தல்.

(ஆ) சங்க கூட்டங்கள் மற்றும் துணைக்குழு கூட்டங்களுக்கு தலைமை தாங்க வேண்டும்.

(இ) ஏதாவதொரு தீர்மானம் தொடர்பில் வாக்குகள் சமமாக பெறும் சந்தர்ப்பங்களில் தீர்மானத்தை மேற்கொள்ளும் வாக்கை பாவித்தல்.

(ஈ) சங்கத்தின் நோக்கங்களையும் இலக்கையும் அடைந்து கொள்வதற்காக சங்கத்தை செயற்படுத்துவதற்கான அதிகாரம்.

11. கௌரவ செயலாளரின் அதிகாரங்கள் பின்வருமாறாகும் : *செயலாளரின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள்.*

(அ) மத்திய மாகாண முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளரின் தேவைகளின்போது சங்கத்திற்கு அழைப்பு விடுத்தமையை அறிவித்தல்.

(ஆ) கூட்ட அறிக்கைகள், உறுப்பினர் பட்டியல் மற்றும் ஏனைய அனைத்து ஆவணங்களையும் முறையாக பேணுவதுடன் சங்க சட்டத்தின் படி நியமப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் மட்டும் சங்கத்தால் கோரப்படும் சந்தர்ப்பங்களில் சங்கத்திற்கு அவ் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

(இ) சட்ட ஏற்பாடுகளின் கீழ் சங்க கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தல்.

(ஈ) உறுப்பினர் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை செயற்படுத்துதல்.

(உ) சங்கத்தின் ஏற்பாட்டு செயற்பாடுகளை செய்தல்.

(ஊ) அனைத்து உறுப்பினர்களினதும் பெயர்ப் பட்டியலை பேணுதல் மற்றும் தேவையான ஆவணங்களை பேணுதல்.

12. கௌரவ பொருளாளரின் அதிகாரங்கள் பின்வருமாறாகும். *பொருளாளரின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள்.*

(அ) சங்கத்திற்கு எல்லா வழிகளிலும் கிடைக்கும் பணம் தொடர்பாக புத்தகங்களில் பதிவு செய்தல்.

(ஆ) சங்கத்தினால் செய்யப்படும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் முறையாக பதிவு செய்தல்.

(இ) உறுப்பினர் குழுவினால் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களை புத்தகத்தில் பதிவு செய்தல்.

(ஈ) பொருளாலரின் பொறுப்பில் வைத்திருக்க வேண்டிய அனைத்து ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள், உறுப்பினர் குழுவினால் பிரேரிக்கப்பட்ட ஏனைய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை சரியான முறையில் பேணுதல்.

(உ) எல்லா கூட்டங்களின்போதும் கணக்குகள் பற்றிய அன்றைய தின நிலைமையை விளக்கப்படுத்த வேண்டும்.

(ஊ) கௌரவ தலைவர் அல்லது உறுப்பினர் குழுவிற்கு தேவைப்படும்போது அல்லது சமர்ப்பிக்க கோரப்படும்போது சங்கத்தின் புத்தகங்களை சமர்ப்பித்தல்.

(எ) ரூ. 5000.00 இற்கு மேற்படாத முன்பணத்தொகையை பெற்றுக் கொள்வதற்கு கௌரவ பொருளாளருக்கு சட்டத்தின் மூலம் தீர்மானம் எடுத்தல்

(ஏ) அங்கத்துவ கட்டணம் போன்றவற்றை பெற்றுக் கொள்ளும்போது முறையான பற்றுச்சீட்டுக்களை விநியோகித்தல்.

(ஐ) அங்கத்துவ கட்டண ஆவணம், நிதி ஆவணம், காசுப் புத்தகம், கணக்காய்வு அறிக்கை, காசோலை, பற்றுச்சீட்டு, பொருட் களஞ்சிய புத்தகம், உறுப்பினர் குழுவினால் பிரேரிக்கப்பட்ட ஏனைய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பேணுதல் மற்றும் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மூலதனம் /கணக்கிற்கு உரிய கொடுக்கல் வாங்கல்களை செயற்படுத்துதல்.

(ஒ) பதவி பணித்துறப்பு /பணிநீக்கம் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் தலைவர் அல்லது அவரின் மூலம் பெயரிடப்படும் உறுப்பினர் குழு அங்கத்தவருக்கு ஆவணங்கள் மற்றும் பொருட்களை கையளிக்க வேண்டும்.

13. கணக்குப்பரிசோதகருக்குள்ள அதிகாரங்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறாகும்: *கணக்குப் பரி சோதகருக்குள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள்.*

(அ) சங்கத்தின் கணக்குகளை வருடாந்தம் பரீட்சித்தல்.

(ஆ) மாகாண முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளரின் மூலம் அல்லது பெற்றோர்களில் பெரும்பாலானவர்கள் எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுக்கும்போது கணக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

*கௌரவ செயலாளரின் பொறுப்பில் இருக்க வேண்டிய புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள்.*

14. (அ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் கௌரவ செயலாளரின் பொறுப்பில் இருக்க வேண்டியதோடு அவற்றை முறையாக பேண வேண்டியது செயலாளரின் பொறுப்பாகும்:-

(i) உறுப்பினர் பெயர்ப் பட்டியல்;
(ii) கூட்ட அறிக்கை புத்தகம்;
(iii) சங்கத்தின் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்ற கடிதங்கள், ஆவணங்கள்;
(iv) உறுப்பினர் குழுவினால் பிரேரிக்கப்பட்ட ஏனைய புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள்;

*கௌரவ பொருளாளரின் பொறுப்பில் இருக்க வேண்டிய புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள்.*

(ஆ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் பொருளாளரின் பொறுப்பில் இருக்க வேண்டியதோடு அவற்றை முறையாக பேணுதல் பொருளாளரின் பொறுப்பாகும்;

(i) அங்கத்துவ நிதி ஆவணம்;
(ii) காசுப் புத்தகம்;
(iii) காசோலை;
(iv) பற்றுச்சீட்டுப் புத்தகம்;
(v) கணக்காய்வு அறிக்கை உள்ளிட்ட ஆவணங்கள்;
(vi) பொருட் களஞ்சிய புத்தகம்;
(vii) உறுப்பினர் குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட ஏனைய புத்தகங்கள் மற்றும் மூலதனத்திற்கு கணக்குடன் தொடர்புபடும் ஆவணங்கள்.

*முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி சங்கத்தின் கணக்கு நடவடிக்கை.*

15. எல்லா அபிவிருத்தி சங்கத்திற்கும் வங்கிக் கணக்கு ஒன்று இருக்க வேண்டியதோடு மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வங்கி ஒன்றில் கணக்கைப் பேணுதல்.

(i) கணக்கின் அடிப்படை வளங்கள் கீழே குறிப்பிட்டவாறாகும்.
(ii) அங்கத்துவ பணம் மற்றும் அபிவிருத்தி சங்கத்திற்கு கிடைக்கும் சகல நன்கொடைகள் மற்றும் பரிசுகள்
(iii) கணக்கிலிருந்து பணம் பெற்றுக் கொள்வதற்கு கௌரவ பொருளாளர், தலைவர் மற்றும் செயலாளர் ஆகிய மூன்று நபர்களும் கையெழுத்திட வேண்டும்.

10 - 18

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.